2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கம்பிவடப் பாதை அமைப்பது பற்றியது.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், நல்ல விரிவான பதிலைச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

137—

தரம் உயர்த்துதல்

***433—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வி, நாள் 30-6-2006-ல் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வரவேற்கிறேன். அதோடு, பொன்னேரி தொகுதியில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அரசுப் பள்ளிகளையே முழுமையாக மக்கள் நம்பியிருக்கின்ற காரணத்தால், தற்போது தரம் உயர்த்தி இருக்கின்ற பாடியநல்லூர் மேல்நிலைப் பள்ளியில் போதிய ஆசிரியர்களும், போதிய அளவிற்குக் கட்டட

வசதியும் இல்லாத காரணத்தினாலும், ஆரணியில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஜெகநாதபுரம், சின்னம்பேடு ஆகிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டும்; ஏனென்றால், 15 கிலோ மீட்டர் சென்று பள்ளி மாணவர்கள் படிக்கின்ற சூழ்நிலை இருப்பதால், அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏழை எளியவர்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த மாணவர்கள் படிப்பதற்கேற்றவாறு சின்னம்பேடு நடுநிலைப் பள்ளி மற்றும் ஜெகநாதபுரம் நடுநிலைப் பள்ளி ஆகியவற்றைத் தரமுயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—45

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தப் பாடியநல்லூர் பள்ளியிலே 1,766 மாணவர்கள் இப்போது கல்வி பயில்கின்றனர். ஆசிரியர்கள் விவரத்தைப் பொறுத்தமட்டிலே, தலைமையாசிரியர் ஒருவரும், முதுகலை ஆசிரியர்கள் 5 பேரும், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல் ஆகியவற்றுக்கும், பட்டதாரி ஆசிரியர்கள் 5 பேர், தமிழ் ஆசிரியர் 3 பேர், இடைநிலை ஆசிரியர் 16 பேர், உடற்கல்வி ஆசிரியர் ஒருவர், அதற்கு மேலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கம்மூலமாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் மூன்று பேர், ஆக இத்தனை ஆசிரியர்கள் அங்கே தற்போது இருக்கிறார்கள்.

கட்டட வசதியைப் பொறுத்தமட்டிலே, Asbestos Sheet என்று சொல்லக்கூடிய அந்த Cement ஓடுடைய அந்தக் கட்டடம் 11 வகுப்பறைகளைக் கொண்டதாகவும், Concrete Building 18 வகுப்பறைகள் கொண்டதாக, NABARD மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய 4 வகுப்பறைகளை உள்ளடக்கி இப்போது அமைந்திருக்கிறது. அந்த இடத்திலே கூடுதலான இட வசதிகளும் இருக்கின்றன. எனவே, கட்டட வசதிகளைப் பொறுத்தமட்டிலும், நிச்சயமாக அவர்களுக்கு இன்னும் தேவைப்பட்டால், NABARD மூலமாகவோ அல்லது அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்மூலமாகவோ, மற்ற திட்டங்கள்மூலமாகவோ அரசு நிச்சயமாக வருங்காலங்களில் பரிசீலித்து நிறைவேற்ற முடியும்.

ஆசிரியர்கள் இப்போது போதுமான அளவிலே இருக்கிறார்கள். தேவைப்படின், கூடுதலான ஆசிரியர்கள் தேவையானால், நம்முடைய

உறுப்பினரோடு கலந்துகொண்டு, ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யும். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய மற்ற பள்ளிகள், ஜெகநாதபுரம் பள்ளியாக இருந்தாலும், சின்னம்பேடு பள்ளியாக இருந்தாலும், ஆரணி பள்ளியாக இருந்தாலும், அவற்றுக்கு முறையான முன்மொழிவுகள், சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து அரசுக்கு வருமானால், அவற்றை வருங்காலங்களிலே தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்வ சிக்ஷா அபியான்'—'அனைவருக்கும் கல்வித் திட்டத்தில்' பெண் கல்வி முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு, பள்ளிக்கூடங்களிலே அதிக மாணவர்கள் இருக்கின்ற பகுதியிலே பணம் கட்டாமல் இருக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், அந்தப் பள்ளிகளையும் தரம் உயர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற திட்டத்தின்கீழே இப்போது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் வரை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய அந்தச் சூழ்நிலை வருகிறபோது, அதற்கு முறையான முன்மொழிவுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியம், மன்மங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, அங்கே அரசு வைத்திருக்கக்கூடிய நிபந்தனைக்குட்பட்டு முன்மொழிவுகள் அரசுக்கு வந்திருக்கின்றனவா என்று நானும், துறை அதிகாரிகளிடத்திலே கலந்து ஆய்வு செய்கிறேன்.

அப்படி அவை பெறப்பட்டிருக்கும் என்று சொன்னால், வரக்கூடிய கல்வியாண்டிலே தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளிலே ஒன்றாக அந்தப் பள்ளியையும் பரிசீலனை செய்வதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

138—

சொந்தக் கட்டடம்

***842—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் நகரில் இரு வணிக வரி அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ராஜபாளையத்தில் வணிக வரித் துறைக்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அரசுக்குரிய இடம் தெரிவு செய்யும்பொருட்டு, சிவகாசி, வணிக வரித் துறை உதவி ஆணையர் அவர்களுக்கு வணிக வரி ஆணையரால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சிவகாசி. உதவி ஆணையர் (வணிக வரி) மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் அறிக்கை பெறப்பட்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராஜபாளையம் நகரில் வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருவதால், மிகவும் விரைவில் இடம் பார்க்கவும், அப்படி இடம் தேவையென்று சொன்னால், தாலுகா அலுவலகம் அருகிலும் இடம் இருக்கிறது; அதேபோல, ஜவஹர்லால் மைதானம் அருகிலும் இடம் இருக்கிறது. அதில் விரைவில் கட்டித் தரும்படி அரசை வலியுறுத்துகிறேன்.